# பத்துவருட நிறைவின் மகிழ்வில்




**BELLEVILLE**

**08-12-09**



## ஆசிச்செய்தி

புலம் பெயர்ந்த கத்தோலிக்க இறைமக்கள் மத்தியில் மரியாயின் சேனை ஆன்மீகப்பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்ற செய்தி எமது செவிகளுக்கு இனிய கானமாக ஒலிக்கின்றது. அந்த வகையில் பிரான்ஸ் ஆன்மீகப்பணியக மரியாயின் சேனை தனது 10ம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளமைக்கு எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

தாய் மண்ணில் பெற்ற விசுவாச வேர்கள் புலம் பெயர் நிலையிலும் ஆழமாக வேரூன்றி நிற்கின்றமை ஓர் எடுத்துக்காட்டாகும். தாய்த் திருச்சபையின் பார்வை, கவனம் இன்று பொது நிலையினர் பக்கம் திரும்பியுள்ளது. அவர்கள் தங்களுக்குரிய இடத்தை உரிமை யுடன் எடுத்துக் கொள்ள வேண்டுமென ஆவலாக நிற்கின்றது. அனைத்துத் துறைகளிலும் தாங்கள் முழு ஆற்றலுடன் செயற்பட வேண்டுமெனப் பணிக்கின்றது.

மரியாயின் சேனையானது பொது நிலையினரின் பணிநிலையின் முதிர்ச்சியை எடுத்துக்காட்டும் அமைப்பாகத் துலங்குகின்றது. இதன் அங்கத்தவர்கள் செபத்தில் மாத்திரமல்ல, மாறாகப் பல்வகை ஆன்மீக, சரீர பணிகளிலும் ஆர்வத்தோடும், துணிச்சலோடும் ஈடுபாடு கொள்கின்றார்கள். பொது நிலையினர் திருச்சபையில் எவ்விதம் வாழ வேண்டும், செயற்பட வேண்டும் என்பதற்கு மரியாயின் சேனை ஓர் எடுத்துக்காட்டாகும்.

இறை உறவிலேயும், பிறரன்புப் பணியிலேயும் தளராது வளர இயேசுவில் விசுவாசமும், மரியன்னையின் பக்தியும் அவர்களை எப்போதும் தூண்டிக் கொண்டிருக்கின்றது.

இவ்வேளையில் யாழ் மரியாயின் சேனை கொமிற்சிய பொன்விழாவைச் சிறப்புடன் கொண்டாட பிரான்ஸ் ஆன்மீகப் பணியக மரியாயின் சேனையானது திருமதி மனோகரி கீதபொன்கலன் தலைமையில் செய்த தளராத நன்கொடையை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் செயற்படும் பிரான்ஸ் மரியாயின் சேனை யானது இன்னும் பல பத்து வருடங்களை வெற்றியுடன் காண வேண்டும் என்று ஆசி கூறி நிற்கின்றேன்.

அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன், ஆன்மீக இயக்குனர், யாழ் மரி. சேனை.



## இயக்குனரின் ஆசியுரை



பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் மாநகரில் அமைந்துள்ள இரக்கத்தின் மாதா ஆலயத்தில் இயங்கி வருகின்ற மரியன்னையின் ஊழியர் சபையினரின் 10 வருட நிறைவில் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்சியடைகிறேன்.

பொதுநிலையினராகிய எமது மரியன்னை ஊழியர்கள் திருச்சபையில் மறைபரப்புப் பணியில் நமது மக்கள் விசுவாச வாழ்வுக்கு ஆற்றிவரும் அர்ப்பணமிக்க சேவைகள் உண்மையிலே பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

உலகின் ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக வாழ நம் இறைவன் கொடுத்த அழைப்பை உளமார ஏற்று பலரது வாழ்வுக்கு அர்த்தம் கொடுத்துள்ளார்கள்.

மரியன்னை பக்தி பொதுமக்களிடையே பொங்கிவழிகின்றது. இப்பக்தி முறையானது விவிலிய அடிப்படையில் வேரூன்றியது. இறையியல் அடிப்படையில் நியாயமானது என்பதில் சந்தேகமில்லை. திருச்சபையின் தாயும் மாதிரியுமாகத் திகழ்பவர் நம் மரியன்னை என்கிறது வத்திக்கான் சங்கம்.

நம் கத்தோலிக்க மரபிலே அன்று முதல் இன்றுவரை, சீரும் சிறப்பும் பெற்று விளங்குபவர் அன்னை மரியாள். அகில உலகிலும் படித்தவர் பாமரர் என்ற வேறுபாடு இன்றி, கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல கத்தோலிக்கர் அல்லாதவராலும் பக்தி பரவசத்துடன் போற்றப்படுபவர் அன்னை மரியாள். அண்டினோரின் துயர் துடைப்பவரும் அன்னை மரியாளே.

இம் மரியன்னை சபைக்கு வித்திட்டவர்களையும் இயக்குனர்களையும் தலைவர் மற்றும் பணியாளர்களையும் வாழ்த்தி, இனிவரும் நாட்களிலும் மரியன்னையின் ஊழியர் சேவை சிறப்புடன் திகழ என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இறை ஆசீரையும் வேண்டி நிற்கின்றேன்.

ஆன்மீகக் குரு
அ. லீனஸ் சொய்சா அ.ம.தி.

**இவரே உம் தாய் (யோவான் 19:27)**

குருதி தோய்ந்த மண்ணிலே, எம்மக்கள் பல இன்னல்களுக்கும், பெருமைத்தனங்களுக்கும் முகங்கொடுத்துக் கொண்டிருந்தாலும், அசைக்கமுடியாத நம்பிக்கையால் உந்தப்பட்டு கடவுள் நல்லவர், வல்லவர் என்பதை ஏற்று, கடவுளின் தாயுடன் இணைந்து பணிசெய்யத் துடிக்கும் பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக மரியாயின் சேனையினருக்கு, சில ஆசீர் வரிகளை வரைவதில் பேருவகை-கயடைகிறேன்.

கடவுள் நம் எல்லோருக்கும் தந்த பொக்கிஷம் "அம்மா". இந்த உண்மையை பல அம்மாக்களும் உணர்வதில்லை, பல பிள்ளைகளும் உணர்வதில்லை என்பது யதார்த்தமான உண்மை. மேலும் கடவுள் தம்முடைய தாயை நம்முடைய தாயாக நமக்குத் தருகின்றபோது, பல முட்டாள்தனமான முரட்டுக்காரணங்களை சொல்லி தட்டிக்கழிப்பது, அழிவை நோக்கிய அவலகரமான பதில் என்பது தவிர்க்கமுடியாத வாதம்.

மரியாளின் பக்தர்கள் என்று சொல்லாதீர்கள், மாறாக அன்னை மரியாளின் பிள்ளைகள் என்று உறவை புதுப்பித்துக்கொள்ளுங்கள் என்று, சில வருடங்களுக்கு முன்பு உங்களோடு லூர்துபதிக்கு திருயாத்திரை மேற்கொண்டபோது, அன்னை மரியாளின் அன்புக்கு, சான்று பகர்ந்த அனுபவம், என் உள்ளத்திலே தேன் வார்த்து நிற்கின்றது.

பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க சமூகம் ஆன்மீகத்தாகம் கொண்டு செயல்படுவது எங்களுக்கு உவகை தருகின்றது. இச்சிறுமந்தை மரியாயின்சேனை உருவாகி, கடந்த 10 வருடங்களாக தாயோடு இருக்கும், இந்த அற்புத உறவுக்கு சான்று பகருவதும், எமக்காக வேண்டுவதும் எமக்கு ஆறுதல் தருகின்றது. அதற்கும் மேலாக, உங்கள் குடும்ப, பொருளாதார சுமைகளைக் கடந்து, ஆன்மீக பணி செயல்படுவதை, உங்கள் மரியாயின் சேனை ஒன்று கூடல்களுக்கு சமூகமளித்தபோது, நேரில் பார்த்து மனம் நிறைந்தேன். தொடர்கின்ற பணி தொடர என் நல்வாழ்த்துக்களும் செபங்களும்.

## உங்கள் 10 ஆண்டுகள் நிறைவில் என் ஆசிச் செய்தி:

நம் வாழ்வில் தீர்க்கமுடியாத பலபிரச்சனைகளுக்கு தீர்வு, அன்னை மரியாள்" என்பதேயாகும். மேலும் உங்கள் ஆன்மீகத்தேடல் நிறைவைக் காணவும் அதைநோக்கி உங்களை உறுதியுடன் வழிநடத்தும் ஆன்மீக இயக்குனர் அருட்திரு லீனஸ் சொய்சா அ.ம.தி, மரியாயின் சேனைத்தலைவி திருமதி.றீற்றா செல்வரத்னம், மதிப்புக்குரிய அங்கத்தவர்கள் அனைவருக்கும், என் செபங்களையும், நல்லாசீர்களையும் பெருமையுடனும், மகிழ்வுடனும் தெரிவிக்கின்றேன்.

என்றும் உங்கள்
அருட் திரு செ.அந்தோனிமுத்து குரூஸ். அ.ம.தி.
அதிபர். அ.ம.தி. இறையியலகம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

## முன்னுரை

### புரம அன்னையின் பணியில் 10 வருடங்கள்

இன்று எமது மரியாயின்சேனை, தனது பத்தாவது ஆண்டு விழாவை பெரு மகிழ்சியுடன் கொண்டாடுகின்றது. எமது மரியாயின் சேனை 1999ம் ஆண்டு மார்கழித் திங்கள் எட்டாம் நாள், அமல உற்பவப் பெருவிழாவன்று, **அமலமரி அன்னை பிரசீடியம்** என்ற இனிய பெயருடன், அன்றைய இயக்குனர் அருட்தந்தை மரியசெபஸ்தியன் அடிகளாரால், ஒன்பது உறுப்பினர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று எமது மரியாயின் சேனை, கடந்த பத்து வருடங்களில் மரியன்னையின் பணியில் வளர்ச்சி பெற்று, தற்போது 24 உறுப்பினர்களுடன் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இந்த நன்நாளில், அருட்தந்தை மரியசெபஸ்தியன் அடிகளாரை அன்புடனும், நன்றியுடனும், நினைவுகூர்ந்து அவருக்கு எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆன்மாக்களுக்கு எப்பொழுதும் சேவை செய்து கொண்டிருப்பதும், பணித்தளங்களில் திருச்சபை அதிகாரிகளுக்கு, ஆன்ம மீட்புப்பணியில் ஒத்துழைப்புத் தருவதும் எமது நோக்கமாகும். எமது சேவையானது, பொதுமக்களுடன், குறிப்பாகத் துன்புறும் மக்களுடன், எம்மை நெருங்கிய உறவு கொள்ளச் செய்கின்றது.

சேனையாளர் யாருக்குப்பணி புரிகிறார்களோ, அவர்களில் யேசுவைக் கண்டு யேசுவுக்கே பணிபுரிய வேண்டும்.

‘ **சேனையாளர் தீர்ப்பிடலாகாது**’

‘ **சேனையாளர் கண்டனங்களுக்கு அஞ்சலாகாது**’

‘ **சேனையாளர் ஒருபோதும் மனச்சோர்வு அடையலாகாது**’

‘ **சேனையரின் குறைகளைக் கண்டு மனங் கலங்கலாகாது**’

என இவற்றைச் சேனைக் கைநூல் எமக்கு அறிவுறுத்துகிறது. எமது மரியாயின் சேனை ஆற்றவேண்டிய தொண்டுகள் கடினமானவை.

ஆதலினால், மரியாயின் சேனை தனது வேலையைத் திறம்படச் செய்ய, தனது பணியில் வளர்ச்சி பெற, ஆன்ம இயக்குனரையே நம்பியிருக்கின்றது. உறுப்பினர்களிடம் ஏற்படும் ஊக்கமின்மையைத் தகர்ந்தெறிந்து, உற்சாகமூட்ட வேண்டியவர் அவரே.

எனவே, மாதம் இருமுறை நடைபெறும் எமது சேனைக்கூட்டங்களில், முடிந்தளவு கலந்து கொண்டு, எமது ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் செயல்படும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மரியாயின்சேனை உறுப்பினர்களாகிய நாங்கள், தங்கள் ஆலோசனைகளுக்கும், அறிவுரைகளுக்கும் அமைந்து, மீட்புப்பணியில் தங்களுக்கு ஒத்துழைப்புத் தருவோம் என வாக்களிக்கின்றோம்.

**மரியாயின் சேனை**

**பரீஸ்**

## பலியிட வருகையில்

வாருங்கள் நம் இறைவன் இல்லம் வாருங்கள்
வாருங்கள் வாருங்கள்
கூடுங்கள் நல் சமூகமாகக் கூடுங்கள்
கூடுங்கள் கூடுங்கள்
வாருங்கள் நம் இறைவன் இல்லம் வாருங்கள்
கூடுங்கள் நல் சமூகமாகக் கூடுங்கள்
நம் மீட்பராய் நல் நேசராய் - (2)
உறவு கொள்ள வாருங்கள் - அவர்
பலிப்பொருளாய் மாறுங்கள்

என்றும் பொங்கும் அவரின் அன்பு
இல்லம் சேர வாருங்கள்
தாங்கும் கரங்கள் நம்மை என்றும்
இறுகப் பற்ற வாருங்கள் (2)
அழைக்கும் தேவனவன் குரலினைக் கேளுங்கள்
அமைதியின் வாழ்வினையே அமைத்திட வாருங்கள் (2)
நன்மை கோடி நலன் செழிக்க நாடி வாருங்கள்
நலன்கள் யாவும் தந்தவரைப் புகழ்ந்து பாடுங்கள்

உண்மை அன்பு உழைப்பு நேர்மை
ஓங்கி செழிக்க வாருங்கள்
கருணை பொங்கும் அவரின் ஆட்சி
நிலைத்து நிற்க வாருங்கள் (2)
புனிதம் மலர்ந்திடவே புரட்சிக்குரல் கொடுங்கள்
புதியதோர் சமுதாயம் படைத்திட வாருங்கள் (2)
புவியில் இறைவன் மாட்சி மலர ஓடி வாருங்கள்
புதுமை செய்யும் இறைவனையே பாடி வாருங்கள்



## தியானிக்கையில்

**என் ஆத்துமம் ஆண்டவரை புகழ்கின்ற வேளையிது**
**என் ஆயன் அவரினிலே மகிழ்கின்ற வேளையிது**

அன்பின் தேவனவர் - தினம்
அவன் குரல் கேட்டிடுவேன்
இரக்கத்தின் கடவுளவர் - அவர்
இதயத்தில் வாழ்ந்திடுவேன் - 2
அவர் அருகினிலே நானிருப்பேன் - தினம்
அவர் வழிதனிலே நான் நடப்பேன் - 2

நீதியின் மன்னவா - அவர்
நிழலினில் வாழ்ந்திடுவேன்
மகிழ்ச்சியின் நிறைவுமவர்
என் மனதினில் மீட்டிடுவேன்
அவர் அருகினிலே நானிருப்பேன்- தினம்
அவர் வழிதனிலே நான் நடப்பேன் - 2

## அர்ப்பணிக்கையில்

நீ தந்ததெல்லாம் உனக்குத் தருகின்றேன்
இதில் புதுமை ஏதும் இல்லை
நீ குடியிருக்க இதயம் தருகின்றேன் (2)
வேறு சிறந்தது என்னில் இல்லை
இறைவா என் காணிக்கை ஏற்றிடுவாய்
நிறைவாய் என் வாழ்வை மாற்றிட வா (2)

விடியும் பொழுது தோன்றும் விடிவெள்ளி
அது விடியலின் காணிக்கையே (2)
காலைக் கதிரவனின் மின்னும் பனித்துளிகள் - (2)
புது நாள் உனக்குத் தரும் காணிக்கையே
நீல வானங்களே அதில் நீந்தும் மேகங்களே - (2)
என் சின்ன இதயத்தையே
அவர் பாதம் சேர்த்திடுங்கள் (2)

மாலைத் தென்றல் கொணரும் மலர் மணம்
மாலை நேரத்தின் காணிக்கையே (2)
வெள்ளிநிலவுடன் ஒளிரும் விண்மீன்கள் - (2)
இரவுப் பொழுது வரும் காணிக்கையே
பாடிடும் பறவையே துள்ளி ஓடிடும் அருவியே - (2)
என் சின்ன இதயத்தையே
அவர் பாதம் சேர்த்திடுங்கள் (2)

## இயேசு கற்பித்த செபம்

விண்ணகத்தில் வாழும் எங்கள் அன்புத் தந்தையே
உமது நாமம் வாழ்கவே உமது அரசு வருகவே
உமது சித்தம் விண்ணவர்போல் மண்ணில் ஆகுக

வாழ்க வாழ்க வாழ்கவே வானகத் தந்தை வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே அவர் ஆட்சி என்றும் வாழ்கவே

எமது உணவை அனுதினமும் எமக்குத் தாருமே
எமக்குத் தீமை செய்தவரை யாம் பொறுப்பது போலவே
எமது பாவம் யாவற்றையும் பொறுத்தருள்வீரே
வாழ்க வாழ்க வாழ்கவே வானகத் தந்தை வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே அவர் ஆட்சி என்றும் வாழ்கவே

எம்மைத் தொடர்ந்து வாட்டிடும் சோதனைகளை
கண்டுணரச் செய்யுமே வெல்ல வலிமை தாருமே
தீங்கனைத்திலிருந்து எம்மைக் காத்தருள்வீரே
வாழ்க வாழ்க வாழ்கவே வானகத் தந்தை வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே அவர் ஆட்சி என்றும் வாழ்கவே




## திருவிருந்துப்பகிர்வில்

உள்ளம் என்னும் கோவிலிலே வாராயோ இறைவா
இன்பம் எங்கள் வாழ்வினிலே தாராயோ தலைவா (2)
நீயே என் தேடல் நீயே என் பாடல்
நீயே என் ராகம் தாளம் சங்கீதமாய் (2)
மழையாக... நதியாக... இசையாக வா..
உணவாக... உறவாக... .உயிராக வா...

என் வாழ்வு உனைத் தேடும் பயணமன்றோ
உன் அன்பே எனை மேவும் தருணமன்றோ (2)
தாயன்பில் தலைசாய்க்கும் சேயாகினேன்---- (2)
நானுந்தன் பேரன்பில் கல்லாகினேன்
　ஆனந்தம் ஆனந்தம் - என்
　விழியிலும் மொழியிலும் ஆனந்தம்
　பேரின்பம் பேரின்பம் - என் (2)
　கனவிலும் நனவிலும் பேரின்பம்

உன் வாக்கு என் வாழ்வின் விளக்கல்லவா
என்போர்க்கு கனிவான மொழியல்லவா (2)
உள்ளார்ந்த நலம் வேண்டி மன்றாடினேன்---- (2)
உன் வார்த்தை கார்மேகப் பயிராகினேன்
　ஆனந்தம் ஆனந்தம் - என்
　விழியிலும் மொழியிலும் ஆனந்தம்
　பேரின்பம் பேரின்பம் - என் (2)
　கனவிலும் நனவிலும் பேரின்பம்

## நன்றி நவில்கையில்

மலர் சொல்லும் நன்றி தேனாகுமே
வான் சொல்லும் நன்றி மழையாகுமே
நிலம் சொல்லும் நன்றி பயிராகுமே
நீர் சொல்லும் நன்றி வளமாகுமே
நீ சொல்லும் நன்றி என்ன - நெஞ்சே
நீ சொல்லும் நன்றி என்ன

ஆண்டவர் வாழும் ஆலயமாவேன்
அன்பு என்னும் தீபம் ஏற்றி வைப்பேன்
யான் எனதென்னும் ஆணவம் வெல்வேன்
யாவர்க்கும் நற்செய்தி சொல்வேன்

மரம் சொல்லும் நன்றி நிழலாகுமே
மணி சொல்லும் நன்றி ஒலியாகுமே
கரம் சொல்லும் நன்றி உழைப்பாகுமே
கடல் சொல்லும் நன்றி அலையாகுமே

வல்லவர் செய்யும் நன்மைகளெல்லாம்
வாஞ்சையாய் எண்ணிப் போற்றி நிற்பேன்
கல்லிலே சிற்பம் செருக்குதல் போல்
களங்கமகற்றி தூய்மை கொள்வேன்

## அன்னையைப் புகழ்கையில்



வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்த்துவோம் மாதாவை (2)

இரட்சகர் திருமாதாவை
பட்சம் நிறையும் மாதாவை
துஸ்ட பேயை வென்றவரை
மட்டில்லா மகிழச்சியோடு

தாயே எம்மைப் பாதுகாரும்
பேயின் மாயைகளைத் தீரும்
வாயாரத் துதிக்கும் எமக்கு
ஒயாது நற்பாக்கியம் தாரும்

எங்கள் இயேசைப் பெற்ற வரை
மங்காத கற்புற்ற வரை
பங்கம் ஒன்றும் அற்ற வரை
பொங்கிய மகிழ்ச்சியோடு

## மரியாயின் சேனைச் செபங்கள்

**கூட்ட ஆரம்பச் செபம்**

பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரலே ஆமென்

**மு.** பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தளுளி வாரும். உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பி உமது நேசத்தின் அக்கினியை அவர்களிடத்தில் பற்றியெரியச் செய்தருளும்.

**மு.** ஆண்டவரே உமது பரிசுத்த ஆவியை எங்களிடத்தில் அனுப்பியருளும்.

**து.** அப்போது எங்கள் இருதயங்களைப் புதுப்பித்தருளும்.

**செபிப்போமாக**

பரிசுத்த ஆவியின் பிரகாசத்தினால், விசுவாசிகளின் இருதயங்களைப் படிப்பித்தருளிய சர்வேசுரா, நாங்களும் அதே பரிசுத்த ஆவியின் வரத்தினால் நல்லவைகளை விரும்பவும், அவருடைய ஆறுதலை எப்போதும் பெற்று அக்களிக்கவும், கிருபை பண்ணியருளும் சுவாமி. ஆமென்.

**மு.** ஆண்டவரே! எனது இதழ்களைத் திறந்தருளும்.

**து.** என் வாய் உம்முடைய தோத்திரங்களைக் கூறும்.

**மு.** சருவேசுரா எனக்குப் பிரசன்னராயிரும்.

**து.** ஆண்டவரே எனக்கு உதவியாகச் சீக்கிரம் எழுந்தருளும்.

**மு.** பிதா சுதன் பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக.

**து.** ஆதியில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக ஆமென்.

(இதன்பின் ஐம்பத்துமூன்றுமணிச் செபமும் கிருபைதயாபர மந்திரமும் சொல்லவும்.)

**மு.** யேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரராய் இருக்கத் தக்கதாக.

**து.** சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**செபிப்போமாக**

சருவேசுரா சுவாமி, உம்முடைய ஏககுமாரன் தமது சீவியத்தினாலும், மரணத்தினாலும், உத்தானத்தினாலும் எங்களுக்கு நித்திய இரட்சணிய சம்பாவனையை எங்களுக்குப் பெற்றருளினாரே. அந்தப் பரம இரகசியங்களை பரிசுத்த மரியாயின் திருச்செபமாலை வழியாக தியானிக்கிற நாங்களும், அவைகளில் அடங்கி இருக்கிறவைகளை அனுசரித்து அவைகளில் வாக்குப் பண்ணப்பட்டவைகளை அடைந்து கொள்ள அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட:டை எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதருடையதிருமுகத்தைப் பார்த்து தந்தருளும் - ஆமென்.

**மு** யேசுவின் அதிபரிசுத்த இருதயமே

**து** எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

**மு.** மரியாயின் மாசில்லாத இருதயமே.

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மு.** புனித சூசையப்பரே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மு.** புனித சுவிசேச அருளப்பரே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மு.** புனித லூயிஸ் மரிய டி மொன்பேர்ட்டே!

**து** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிதா சுதன் பரிசுத்த ஆவியின்.........

## சேனைச் சங்கிலி

**பல்லவம்:**

- சந்திரனைப்போல் ரூபவதியாய், சூரியனைப்போல் இலங்குகிறவளாய், படையணியைப்போல் பயங்கரம் உறுத்துகிறவளாய், அருணோதயம் போல் எழுந்து வருகின்ற இவர் யார்?
- என் ஆத்துமமானது என் ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது.
- ஏனெனில் தமது அடிடையானவளுடைய தாழ்மையை கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினார். ஆகையால் இதோ எல்லாத் தலைமுறைகளும் எனைப் பாக்கியவதி என்பார்கள்.
- ஏனெனில் வல்லமை மிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார். அவருடைய நாமமோ பரிசுத்தமுள்ளது.
- அவருடைய கிருபையும் தலைமுறை தலைமுறையாய் அவருக்குப் பயந்து நடக்கிறவர்கள் மேல் தங்குகின்றது.
- அவர் தம்முடைய கரத்தின் வல்லமையைக் காட்டியருளினார். இருதய சிந்தனையில் கர்வமுள்ளவர்களைச் சிதறடித்தார்.
- வல்லமை உடையவர்களை ஆசனத்தில் நின்று தள்ளி தாழ்ந்தவர்களை உயர்த்தினார். பசித்திருக்கிறவர்களை நன்மைகளால் நிரப்பித் தனவான்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.
- தமது கிருபையை நினைவுகூர்ந்து தம்முடைய தாசராகிய இஸ்ராயேலைக் கைதுக்கினார். அப்படியே தமது பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஊழியுள்ள காலம் அவர் சந்ததியாருக்கும் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார்.

## செபிப்போமாக

பரம பிதாவின் சமூகத்தில் எங்கள் மத்தியஒதராய் இருக்கிற யேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி. தேவரீர் தாமே உம்முடைய திருத்தாயாரை எங்கள் தாயாராகவும் உமது முன் எங்கள் மத்தியஸ்தியாகவும் நியமித்ததருளச் சித்தமானீரே. உமது அனுக்கிரகங்ககளைத் தேடி உம்மிடம் வருகிற எல்லோரும் அவைகளை அத் திருத்தாயார் மூலமாகப் பெற்று அக்களிக்கும்படி தேவரீர் இரக்கமாய் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். - ஆமென்.

## முடிவுச்செபம்

பிதா சுதன் பரிசுத்த ஆவியின்……

சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம். நாங்கள் எங்கள் அவசியங்களில் வேண்டிக் கொள்வதற்கு, தாயே நீர் பராமுகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்ச மகிமையுடையவளுமாய் இருக்கிற கன்னிகையே, சகல ஆபத்துக்களிலும் நின்று எங்களைத் தற்காத்துக் கொள்ளும் - ஆமென்.

**மு.** வரப்பிரசாதங்களுக்கு மத்தியஸ்தியாகிய மரியாயே! (கூட்ட நேரத்தில் பிரசீடியத்தின் பெயர்)

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மு.** அதிதூதரான புனித மிக்கேலே கபிரியேலே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**மு.** பரலோகத்தின் சகல சத்துவங்களே மரியாயின் சம்மனசுகளின் சேனையே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**மு.** புனித ஸ்நாபக அருளப்பரே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மு.** புனித பேதுரு பாவிலு அப்போதலர்களே!

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**<u>செபிப்போமாக:</u>**

சருவேசுரா சுவாமி மரியாயுடைய கொடியின் கீழ் தொண்டு செய்கிற நாங்கள், உலகத்தை வெற்றி கொள்ளும்படியாக, அத்திருத்தாயாரில் நம்பிக்கையும், தேவரீரிடத்தில் பூரண விசுவாசத்தையும், எங்களுக்குத் தந்தருளும், அவ்விசுவாசம் உயிருள்ளதாய் தேவ நேசத்தினால் துண்டப்பட்டதாயிருந்து, நாங்கள் செய்யும் கிர-ிகைகளையெல்லாம், உமது பேரில் வைக்கும் சுத்தமான அன்பினால் வெற்றி கொள்ளும் படியாகச் செய்யவும், பிறரில் உம்மைக் கண்டு, அவர்களில் உமக்கே தொண்டு செய்யவும் பண்ணுவதாக, அது கற்பாறைபோல் அசைவற்றதாக விளங்கி, எங்கள் சீவியத்தில் நிகழும், சிலுவைகள், பிரயாசைகள், பிரதிகூலங்கள் மத்தியிலே், நாங்கள் அமரிக்கையாயும், தத்தளிப்பில்லாமலும், நிலைகொள்ளச் செய்வதாக, அது துணிகரமான ஒரு விசுவாசமாகி, நாங்கள் தேவரீருக்காகவும், ஆத்ம இரட்ணியத்திற்காகவும், மகத்தான காரியங்களில் கைவிட்டு, அவைகளைத் தத்தளிப்பின்றி நடத்த எங்களைத் தூண்டி விடுவதாக அது எங்களுக்கு வழிகாட்டும் அக்கினித் தம்பம்போல் முன் நடந்து, மரியாயின் சேனைகள் எல்லோரும் ஒன்றுகூடி முன்னேறிச் செல்லவும், சகல இடங்களிலும் தேவசிநேக அக்கினியை மூட்டி விடவும், இருளிலே, மரண நிலையில் வசிப்பவர்களுக்கு, ஞானவெளிச்சத்தை ஏற்றி வைக்கவும், வெதுவெதுப்பானவர்களிடத்தில், வைரமான பக்தியருட்சியைக் கிளப்பி விடவும், பாவமரணத்தில் உட்பட்டிருக்கிறவர்களுக்கு, புண்ணிய சீவியத்தை உதவவும், சேனைக்குச் சேர்ந்த நாங்கள் ஒவ்வொருவரும், சமாதானத்தின் வழியே நடந்து ஒருவரும் தப்பாது, உமது அன்பின் மகிமை பொருந்திய இராட்சியத்தில் வந்து சேரவும், துணைபுரிவதாக. ஆமென்.

**மு.** எங்கள் சேனையிற் சேர்ந்து மரித்தவர்களும், இறந்துபோன மற்ற விசுவாசிகளும், சருவேசுரனுடைய இரக்கத்தினால, நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக.

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். பிதா சுதன் பரிசுத்த ஆவியின்......

**மு.** எங்கள் சேனையிற் சேர்ந்து மரித்தவர்களும், இறந்துபோன மற்ற விசுவாசிகளும், சருவேசுரனுடைய இரக்கத்தினால், நித்திய இளைப்பாற்றி அடைவார்களாக.

**து.** எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால்..... ஆமேன்

## நன்றியுரை

“ பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே”

இலங்கைத் தமிழ் கத்தோலிக்கப் பணியகம் அமைந்துள்ள ஒப்புரவு மாதா ஆலயத்தில் நடத்தப்படும் “ அமலஉற்பவ பிரசீடியம்” மரியாயின் சேனையின் பத்தாவது ஆண்டு நிறைவை யொட்டிய முதற் கன்னி மலரும், நன்றி நவிலலுமாகும்.

1999ம் ஆண்டு எட்டாம் நாள் மரியாயின்சேனைக்கு வித்திட்ட பெருமை, அருட்தந்தை மரியசெபஸ்தியன் அடிகளாரையே சாரும் . வித்திட்ட இந்த விதையானது விருட்சமாக வளர நீர் ஊற்றி வளர்த்தவர், அருட்தந்தை அமலதாஸ் அடிகளார் ஆவார். அதைத் தொடர்ந்து இந்த மரமானது ஆல்போல் தளைக்க, பாசம் என்னும் நீர் ஊற்றி பண்படுத்தி வருபவர், இன்றைய ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை லீனஸ் அடிகளார். இதில் ஒரு பெருமை மூவருமே **(பிதா, சுதன், தூய ஆவி)** அமலமரித்தியாகிகள். பொறுத்திருந்து பாருங்கள் தூயஆவியின் செயலை.

இச்சேனையில் தொடர்ந்து இதுவரை பணியாற்றிய தலைவர்கள், இணைத்தலைவர்கள், செயலாளர்கள், இணைச்செயலாளர்கள், பொருளாளர்கள், அங்கத்தவர்கள் அனைவருக்குமே நன்றி நவில்கின்றோம்.

வருடாவருடம் நடைபெறும் இத்திருவிழாத் (மார்கழி 8) திருப்பலிக்கு பாடல்களை பண்ணிசைக்கும் பாடகர் குழாமுக்கும், இன்றைய தினம் சிறப்புத்திருப்பலியை நிறைவேற்றும் குருக்களுக்கும், முதல் செல்வக்குழந்தையாம் 10வது ஆண்டு மலரை அனைவர் கரங்களிலும் தவழ, அதற்கு மெருகூட்டி அச்சிட்டுத் தந்த பெருமையும், புகழாரமும் எங்கள் ஆன்மீகப்பணியக இயக்குனர் அருட்தந்தை லீனஸ் அடிகளாருக்கே உரித்தானவை.

இதுவரை காலமும் மரியாயின்சேனையில் இருந்து, பங்குபற்றி சேவைகள் பல புரிந்த அனைத்து சகோதர சகோதரிகட்கும், மரியாயின் சேனையின் பெயரால் நன்றி கூறுகின்றோம். தவறுதலாக யாரும் விடப்பட்டிருந்தால் தவறுதலுக்கு வருந்துகிறோம்

நன்றி

**மரியே வாழ்க!**

# பத்தாவது ஆண்டு மகிழ்வில்

**மரியே வாழ்க!**



நவசகோதரிகள் ஒன்றிணைந்து
நல்வாழ்வு தரும் ஆன்மீகம் நாடி
அமல உற்பவ அன்னை
திருநாளில் கூடி
அமலமரித் தியாகிகள் சபை
அருட்தந்தை மரியசெபஸ்தியன்
அடிகளின் ஆசியுடன்
மலர்ந்தது மரியாயின் சேனை
இப்பணியகத்தில்

அன்னையின் பரிந்துரையால்
ஆண்டவர் அருட் துணையில்
ஆண்டுகள் பத்துகளில்
அமல உற்பவ உற்பவ அன்னை
சேனையை நாடி
இணைய வந்தோர் தொகை
இருபத்தைந்து

புலம் பெயர் வாழ்விலும்
புனிதவழி நாளும் தொடர
புனித அன்னை காட்டிய
பணிவு தூய்மை பிறரன்பு
பக்தியுடன் இறைவிசுவாசம்
பரிந்து பேசி மகனிடம் - எமை
பரலோகம் சேர்க்கும் நல் வழியை
தொடர்வோம் நாளும் மகிழ்வுடனே

தொடர்கின்ற மனித அவலங்கள் நீங்க
சொல்லிடுவோம் நாளும் திருச்செபமாலையை
இவ்வையகத்தில் நன்மை நிறைய
இகபரத்தில் புனிதம் மலர
எம்மால் இயன்றளவு இப்புவி வாழ்வில்
என்றுமே இறைதுணையுடன் இன்பமாக
எடுத்தியம்புவோம் இறைநாமத்தை
என்றென்றும் தொடருவோம்
அன்னைமரி அன்பு வழியில்
நிறைவாக இணைத்திடுவோம்
சேனையில் சகோதர உறவுகளை.......

# மரியே வாழ்க









பிரான்ஸ் இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகம்
Chapelle Notre Dame Réconciliatrice,
57, Bd de Belleville, 75011 PARIS.
Tél & Fax : 01.48.06.95.05